DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No.85 /2021

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜாகிருஷ்ணன் | Father's/Husband's Name | : பழனிச்சாமி |
| Village | : கன்னியப்பபிள்ளைபட்டி | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2026

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்தில் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். யார்மீது வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் எனது அண்ணன் மற்றும் அவரது மனைவி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண்.187/2. அதன் விஸ்தீரணம் 96 செண்ட். தாவா சொத்தின் நான்குமால் தெரியும். கிழக்கே – பூசாரி நிலம். வடக்கே – நடராஜன் இடம், மேற்கே – பாதை, தெற்கே – அழகர்சாமி இடம். தாவா சொத்து ஆதியில் எனது பாட்டி உண்ணாமலையம்மாளுக்கு பாத்தியப்பட்டிருந்தது. உண்ணாமலையம்மாளின் கணவர் பெயர் கோபால் கவுண்டர், அப்பா பெயர் பெருமாள் கவுண்டர். கோபால்கவுண்டருக்கு – உண்ணாமலையம்மாளுக்கு 3 மகன்கள் என்றால் சரிதான். தனிக்கொடி, பழனிச்சாமி, நடராஜன். மேற்படி பழனிச்சாமியின் மகன் தான் நானும் 1ம் பிரதிவாதியும். எங்களோடு பிறந்தவர்கள் மொத்தம் 6 பேர். 2 ஆண், 4 பெண் பிள்ளைகள்.

2) தாவா சொத்து எனது தந்தைக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் உண்ணாமலையம்மாள் பாக விஸ்தியின் போது அவருக்கு கொடுத்ததாகும். மேற்படி பாகவிஸ்தி பத்திரம் வாய்மொழியாக ஏற்படுத்தப்பட்டது. நான் சொல்வது போல் தாவா சொத்து எனது தந்தைக்கு பாகமாக கொடுக்கவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது தாத்தா கோபால் கவுண்டரின் அம்மா பெயர் தெரியாது. எனது அப்பாவின் அம்மா உண்ணாமலையம்மாளும், எனது அப்பா ஆகியோர் சேர்ந்து தாவா சொத்தை ராமசாமி என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் கிரையமாக கொடுக்கவில்லை, வட்டி பணத்திற்கு

ஆதரவாக கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்தார்கள். எனது பாட்டி உண்ணாமலையம்மாளுக்கு ரூ.12,000/– ஜீவனாம்சமாக கொடுத்ததற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை, வாய்மொழியாக பேசிக்கொண்டார்கள்.

3) மேற்படி ஜீவனாம்ச தொகையை ஊர் பெரியவர்களை வைத்து பேசி கொடுத்தோம் என்பதற்கு ஆதரவாக அந்த ஊர் பெரியவர்களை சாட்சியாக விசாரிக்க தயாராக இருக்கிறேனா என்றால் இருக்கிறேன். 1982ம் ஆண்டு எனது பாட்டியும், அப்பாவும் ராமசாமிக்கு விற்பனை செய்த சொத்து தான் தாவா சொத்து என்றால் சரிதான். மேற்படி ராமசாமியிடமிருந்து 1988ம் ஆண்டு எனது அப்பா கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். அந்தக் காலகட்டத்தில் எனக்கு 9 வயது இருக்கும். 1ம் பிரதிவாதி காலேஜ் படித்து கொண்டிருந்தார், 20–21 வயது இருக்கும். எனது அப்பா அந்த காலக்கட்டத்தில் விவசாயம் தான் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு உதவியாக நானும் எனது மற்ற சகோதர சகோதரரிகளும் சேர்ந்து விவசாயம் வேலை பார்ப்போம் என்றால் சரிதான். அந்த விவசாய வேலை பார்த்து தான் தாவா சொத்தை கிரையம் வாங்கினோம் என்றால் ஆமாம், எனது அப்பா வாங்கினார். அந்த காலகட்டத்தில் எனது அப்பா ரியல் எஸ்டேட் தொழில் செய்யவில்லை என்றால் சரிதான்.

4) நானும் எனது சகோதர சகோதரிகள்அனைவரும் உழைப்பில் வந்த வருமானத்தை வைத்து தான் தாவா சொத்தை கிரையம் வாங்கினோம் என்று சொன்னால் இந்த வழக்கிற்காக எனது தந்தைக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்று பொய் சொல்கிறேன்என்றால் சரியல்ல. கூட்டு குடும்ப வருமானத்தை வைத்து கிரையம் வாங்கியதால் அதில் அனைவருக்கும் கூட்டு பாத்தியம் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. 1ம்பிரதிவாதி தாவா சொத்தில் பாகம் கிடைத்து இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் இந்தவழக்கு சொத்தையும் சேர்த்து தான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்குமுன்பு 1ம் பிரதிவாதி தாவா சொத்திற்கு வந்து அவரது பாகத்தை கேட்டதால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த பிரச்சனை நடந்த பிறகு தாவா சொத்தை எனது பெயருக்கு எனது அப்பா செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரிதான்.

5) எனது அப்பாவிற்கு கடன் பிரச்சனை இருக்கிறது என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு காத்தாடி கம்பெனிக்கு அக்ரிமெண்ட் போட முயற்சித்த போது 1ம் பிரதிவாதி அதை கேட்டதால் நான் அவரை அடித்துவிட்டேன் என்றாலும் அது சம்பந்தமாக இராஜதானி காவல்நிலைத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, நான் அவரை அடிக்கவில்லை. ஆனால் புகார் கொடுத்தது உண்மை. அந்த புகாரின் பெயரில் நான் விசாரணைக்கு ஆஜரானேன். காவல்நிலையத்தில் உரிமையியல் சம்பந்தமான பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடிக் கொள்ள சொல்லிவிட்டார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு பாகம் கொடுக்கக்கூடாது என்பதற்காக எனது பெயரக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்துவிட்டார்என்றால் சரியல்ல.

6) 1ம் பிரதிவாதி எனது தந்தைக்கு உள்ள கடனை திருப்ப செலுத்த முடியாது என்று சொன்னதால் எனக்கு தானமாக எழுதிகொடுத்தார். அந்தக் கடன் தொகையில் தனது பாகத்தை 1ம் பிரதிவாதி செலுத்தினால் அவருக்கு தாவா சொத்தில் பாகம் கொடுக்க தயாராக இருக்கிறேனா என்றால் மொத்த தொகைக்கான வட்டி அசல் சேர்த்து கொடுத்தால் பாகம் கொடுக்க தயாராக இருக்கிறேன். நான் செலுத்திய கடன் தொகைக்கான ஆவணங்களை தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்கிறேன். தாவாசொத்து கூட்டுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் நான்அ தை மறைத்து வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு சட்டப்படி பாகம் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் பாகத்தை மறைத்து இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 06.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2026.02.06 13:08:00 +0530

District Munsif,
Aundipatti.